# <u>In the Court of the Additional District Munsif, Padmanabhapuram.</u>

O.S.No.. 164/2017 தேதி- 03.02.2026

(P.W.1) . சர்ச்சில்

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கு பட்டிகை சொத்து என் அப்பாவிற்கு உரிமைப்பட்டது. என் அப்பாவிற்கு பூர்வீகமாக உரிமைப்பட்டது. எனது அப்பாவிற்கு ஆவணத்தின்மூலம் வந்ததா அல்லது நீதிமன்ற தீர்ப்பின்படி வழக்கு பட்டிகை சொத்து கிடைத்ததா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் அப்பா இறக்கும்வரை வழக்கு பட்டிகை சொத்து சம்பந்தமாக இஸ்டதான பத்திரமோ அல்லது வேறு ஆவணமோ எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ. 1 ஆவணம் எதன் அடிப்படையில் எழுதப்பட்டது என்றால் எனது அப்பாவிடமிருந்த ஆவணத்தின் அடிப்படையில் எழுதப்பட்டது அது என்ன ஆவணம் என்று எனக்கு தெரியாது. என் அப்பாவிடமிருந்த ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை.

எனது சத்தியபிரமாண வாக்குமூலத்தில் யார் சொல்லிக்கொடுத்த தயார் செய்யப்பட்டது என்றால் நான் சொல்லிக்கொடுத்துதான் எனது வழக்கறிஞர் தயார் செய்தார். அதனுடன் எத்தனை ஆவணம் தாக்கல் செய்துள்ளேன் என்று எனக்கு ஞாபகமில்லை. வழக்கு பட்டிகை சொத்தின் சர்வே எண் 636/13 ஆகும். மேற்படி சர்வே எண்ணில் எத்தனை சென்ட் வரும் என்றால் எனக்கு தெரியாது. எனது அப்பா யாருக்கெல்லாம் மேற்படி சர்வே எண்ணில் விலைக்கு கொடுத்தார் என்றால் 1 மற்றும் 2 ஆம் பிரதிவாதிகள் மற்றும் வேறு நபர்களுக்கு விலைக்கு கொடுத்தார் பெயர் ஞாபகமில்லை. வேறுநபர்களை இந்த வழக்கில் கட்சியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான்.

மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தில் வழிப்பாதை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் பக்கம் 6 ல் 3 வது பத்தியில் மேற்படி சர்வே எண் 636/13 ல் பொதுவழி இருப்பதாக கூறப்பட்டிருக்கிறது என்றால் குடும்ப பொதுவழி என கூறப்பட்டிருக்கிறது. அதற்கு எத்தனை அடி வீதி என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆனால் வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வரைபடத்தில் வடக்கு 6.5 லிங்ஸ், மேற்கு 5.5 லிங்ஸ் , தெற்கு ஞாபகமில்லை.

வா.சா.ஆ. 1 ஆவணத்தில் தெற்கு பக்கம் 5.5. லிங்ஸ் என குறிப்பிடப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணம் தயாரிக்கப்பட்டதற்கு முன்பே எனது அப்பா 1 ஆம் பிரதிவாதிக்கு சர்வே எண் 636/13 ல் 11 சென்ட் சொத்தை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1 ஆம் பிரதிவாதி விலைக்கு வாங்கிய உடன் வா.சா.ஆ.1 ஆவணத்திற்கு முன்பே காம்போண்ட் சுவர் கட்டி அனுபவித்து வருகிறார் என்றால் சரியல்ல.

வா.சா.ஆ.1 ஏற்படுத்தும்போது 1 ஆம் பிரதிவாதி மேற்படி சொத்தில் வீடு வைத்து குடியிருந்து வருகிறார் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. எனது குடும்ப சொத்திற்கு தெற்கு பக்கம்தான் வழக்கு பட்டிகை சொத்து என்றால் சரிதான். மேற்படி பாதை தற்போதும் உள்ளது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்திற்கு கிழக்கு பக்கம்தான் 1ஆம் பிரதிவாதியின் வீடு உள்ளது என்றால் சரிதான். பிரதிவாதிகள் எனது வீட்டின் பழைய காம்போண்ட் சுவரை இடித்தார்கள் எனக்கூறுவது சரிதான். மேற்படி காம்போண்ட் சுவரின் மேற்கு பக்கம்தான் நான் கூறும் வழிப்பாதை இருக்கிறது என்றால் சரிதான். வழக்கு பட்டிகை சொத்திற்கு அனைத்து பக்கங்களிலும் எங்களது குடும்ப சொத்து இருந்தது என்றால் தற்போது இல்லை முன்பு இருந்தது. தெற்கு பக்கம் இருக்கும் ரோடு முன்பே இருந்தது.

வழக்கில் மேற்கு பக்கத்திருக்கும் அனைத்து உரிமையாளர்களையும் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் 2 ஆம் பிரதிவாதியை மட்டும் தரப்பினராக சேர்த்துள்ளேன். வா.சா.ஆ. 1 ஆவணத்தில் குறிப்பிட்டிருக்கும் வழிப்பாதை எனது அப்பாவிடமிருந்த ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதா என்றால் பூர்வீக ஆதாரப்படி குறிப்பிடப்பட்டிருந்தது. எனது அப்பாவிடமிருந்த ஆவணத்தை தாக்கல் செய்தால்தான் வா.சா.ஆ. 1 ஆவணத்திலிருக்கும் வழிப்பாதையை நிரூபிக்கமுடியும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ. 1 ஆவணத்தில் வழக்கு பட்டிகை சொத்து எவ்வாறு எனக்கு கிடைத்தது என்று எந்த குறிப்பும் இல்லை என்றால் சரிதான்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)